[16th July 1957

THE HON. SRI R. VENKATARAMAN : It is not sub judice, Sir. Recovery of money is pending.

SRI S. B. ADITYAN : எவ்வளவு தொகை கொடுக்கப்பட்டது என்பதை மந்திரி அவர்கள் அறிவிப்பாரா ?

THE HON. SRI R. VENKATARAMAN : பத்து லட்ச ரூபாய்.

SRI K. VINAYAKAM : Sir, are these shareholders who signed the indemnity bond to the Government for this sum of rupees ten lakhs, now residents of Madras State or does any of them belong to the Andhra State?

THE HON. SRI R. VENKATARAMAN : That would be sub judice, Sir. Any matter connected with recovery of money should be considered sub judice, either with regard to the persons or with regard to the amounts.

SRI V. K. KOTHANDARAMAN : இந்த மில் குடியாத்தத்தில் இருக்கக் கூடியது அல்ல. காட்பாடியில் இருக்கக்கூடியது. இந்த மில்லுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கும் டைரக்டர்கள் அத்தனை பேரும் இந்த ராஜ்யத்தில் முன்னால் நிதி மந்திரியாக இருந்த ஸ்ரீ கோபால் ரெட்டியார் அவர்களுக்குச் சொந்தக்காரர்கள். மாமனார், ஒருவர் மாமியார்.

MR. SPEAKER : கனம் மந்திரி அவர்கள் இப்பொழுது தான் சொன்னார் : " இந்த விஷயம் கோர்ட்டில் இருக்கிறது, ஆனேக் குறித்துப் பேசக் கூடாது. பொதுவாக ஏதாவது கேள்விகள் கேட்கவேண்டுமென்றால் கேட்கலாம். " அதன்படி தான் அங்கத்தினர் கேள்விகள் கேட்க வேண்டும்.

SRI V. K. KOTHANDARAMAN : இது போன்று கொடுத்து, அதை சுமார் பத்து வருஷ காலம் ஆகியும் கூட, வாங்காத காரணத்தினால், அந்த மில்லை நடத்த முடியாமல், அதில் உள்ள பல பொருள்கள் திருட்டுப் போனதற்குப் பிறகு, சமீபத்தில் 5 லட்சம் 40 ஆயிரம் ரூபாய்க்கு ஏலம் விடப்பட்டது. அப்படியிருக்க மீண்டும் கேஸ் நடத்துவது எதற்காக ?

THE HON. SRI R. VENKATARAMAN : பணம் வசூல் செய்ய முடியாததினால் நம்முடைய " மார்ட்கேஜ் " ஐ வசூல் செய்வதற்காக அந்த மில்லை ஏலம் போட்டோம். முதல் ஏலம் 5 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய்க்கு எடுக்கப்பட்டது. அது போதாது, இன்னும் அதிக விலைக்குப்போகும், துண்டு துண்டாக ஏலம் போட்டால் சர்க்காருக்கு வேண்டிய பணம் கிடைத்துவிடும் என்று சொன்னதன்பேரில் மீண்டும் துண்டு துண்டாக ஏலம் போடப்பட்டது. துண்டு துண்டாக ஏலம் போட்டும், ரூ. 5,47,509 க்குத் தான் ஏலம் எடுக்கப்பட்டது. முதலில் ஏலம் எடுத்தவர், " இரண்டாவது ஏலம் செல்லாது " என்று கோர்ட்டில் தாவா போட்டிருக்கிறார். அது முடியும் வரையில் பணம் வருவது கஷ்டம்.

SRI K. VINAYAKAM : Sir, are the Government aware of the fact that this Mill did not work even for one single day and did not produce one pint of oil nor did they purchase the necessary machinery so as to make it a complete Mill ?

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, there is no use crying over spilt milk ?

SRI M. P. SARATHI : " சுதர்சன் ஆயில் மில் " லை சர்க்காரே ஏற்று நடத்த வேண்டுமென்று நகராட்சியும், மாவட்டக் கழகமும், பொது ஜனங்களும் மகஜர் அனுப்பியிருக்கிறார்கள். இதை சர்க்கார் ஏதாவது கவனிக்குமா ?

16th July 1957]

THE HON. SRI R. VENKATARAMAN : இது நன்ருக பரிசீலனை செய்யப்பட்டு, அதை நடத்துவது நஷ்டகரமாக இருக்கும் என்று முடிவு செய்யப்பட்டது.

SRI V. K. KOTHANDARAMAN : தொழில் அபிவிருத்தி என்ற பெயரால் இப்படி லட்சக்கணக்கான ரூபாய் கொடுத்து, நஷ்டம் அடையக் கூடிய இந்தச் சந்தர்ப்பத்திலே, சர்க்கார் ஒன்று செய்யலாம், அங்கே நல்ல அருமையான கட்டிடங்கள் கட்டி வைத்து, அதிலே, வேண்டிய "மெஷினரி"யும் கொண்டு வந்து வைத்திருக்கும்போது, ஏன் சர்க்கராகவே அந்தத் தொழிற்சாலையை எடுத்து நடத்தக்கூடாது ?

THE HON. SRI R. VENKATARAMAN : முதலில் பத்து லட்சம் நஷ்டம். அதை சர்க்கார் நடத்துவதில் மேற்கொண்டு நஷ்டம் வரும் என்ற காரணத்தால் தான் அதை எடுத்து நடத்த முடியாமலிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : இப்பொழுது இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது அரசாங்கத்திற்குப் பெரிய நஷ்டம் என்று உணருகிற இந்த சர்க்கார், இதற்கு முன்னே, இப்படிப்பட்ட திட்டத்திற்கு பணம் கொடுத்தது தவறு என்பதை உணரவேண்டும். இனி இப்படிப்பட்ட தொழில்கட்குப் பணம் கொடுப்பதற்கு முன்னால், அதைக் குறித்து மிக நன்ருக ஆராயச்சி செய்து, அதற்குப் பின் கடன் தருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் போன்றவர்கள், இப்பொழுது புதிதாக சட்டசபையில் வந்திருக்கிருர்கள், முன்பு சட்டசபையில் கண்காணிப்பாக இருந்தவர்களைவிட நன்ருக் கண்காணிப்பாக இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

Investigation regarding new water sources in the State

* 117 Q.—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government are aware of the fact that the Central Government have directed Shri Kanwar Jain, Chairman, Central Water and Power Commission, to investigate new water sources in the Madras State?

THE HON. SRI P. KAKKAN : No, Sir.

SRI A. R. SUBBIAH MUDALIAR : Inter-State Water Sources-ஐப் பரிசீலனை செய்யும்படி மத்திய சர்க்காரால் நியமிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீ கன்வார் ஜெயின் அவர்களுடைய உதவியை நமது சர்க்கார் நாடுவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : எப்பொழுது எல்லாம் மத்திய சர்க்காரின் உதவியும், கமிஷனின் சேர்மனுடைய உதவியும் தேவையோ அப்பொழுது எல்லாம் நாடுவோம்.

Electric supply in Madras City

* 118 Q.—SRI S. PAKKIRISAMY PILLAI : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether the staggering of electric supply between 18.00 and 20.00 hours in Madras City has been made as a permanent measure?

THE HON. SRI V. RAMIAH : The answer is in the negative.